தடையை மீறி ஏராளமானோர் குவிந்தனர்

நெல்லையில் ராமராஜ்ய ரதயாத்திரைக்கு வரவேற்பு



▶ பாளை. அரியகுளத்தில் ராம ராஜ்ய ரத யாத்திரைக்கு சாரதா கல்லூரி மாணவிகள் வரவேற்பு அளித்தனர்.

பலத்த போலீஸ் பாதுகாப்புடன் குமரி சென்றது

நெல்லை, மார்ச் 23: தூத்துக்குடியில் இருந்து நெல்லை மாநகர பகுதிக்கு நேற்று மாலை வந்த ராம ராஜ்ய ரதயாத்திரைக்கு பாஜக வினர் மற்றும் சாரதா கல்லூரி மாணவிகள் மலர் தூவி கோலாகல வரவேற்பு அளித்தனர். பலத்த போலீஸ் பாதுகாப்புடன் குமரி சென்றது.

ராமர் கோயில் கட்ட வலியுறுத்தி விஸ்வ இந்து பரிஷத் சார்பில் அயோத்தில் இருந்து புறப்பட்ட ராம ராஜ்ய ரதயாத்திரை 5 மாநிலங்களுக்கு சென்று விட்டு கேரளா வழியாக கடந்த 20ம் தேதி தமிழக எல்லையான நெல்லை மாவட்டம் புளியரையை வந்தடைந்தது. அங்கு இந்து அமைப்புகள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த ரதயாத்திரைக்கு மமக, மதிமுக, விசி, எஸ்டிபிஐ, தமுமுக, மமுக, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து மறியல் போராட்டம் அறிவித்தன.

இதைத் தொடர்ந்து சுமார் 2 ஆயிரம் போலீசார் செங்கோட்டை மற்றும் புளியரை பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். முன்னதாக மறியலில் பங்கேற்க வந்த அரசியல் கட்சி தலைவர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போலீசார் கைது செய்தனர்.

பலத்த போலீஸ் பாதுகாப்புடன் கடையநல்லூர், சிவகிரி வழியாக ராஜபாளையம் சென்றது. அங்கிருந்து மதுரை, ராமேஸ்வரம் சென்ற ரதம் பின்னர் தூத்துக்குடி, தெய்வசெயல்புரம், வல்லநாடு வழியாக நெல்லைக்கு நேற்று மதியம் 2.30 மணிக்கு நுழைந்தது. உத்தமபாண்டியன்குளத்தில் ஐஜபிஇ பள்ளி சார்பில் ராமராஜ்ய ரதத்திற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. வளாகத்திற்குள் சென்ற ரதத்திற்கு 5 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவிகள் மலர் தூவி வரவேற்பு அளித்தனர். சாரதா அம்பாள் கோயிலில் சிறப்பு தீபாராதனை நடந்தது.

கறுப்புக்கொடி காட்ட முயற்சி

நெல்லை - தூத்துக்குடி சாலையில் மாநகர எல்லையில் இருந்து கேடிசி நகர் ரவுண்டானா வரை 10 அடிக்கு 4 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் கேடிசி நகரில் ஒரு உணவகத்தில் ராம ராஜ்ய ரதத்திற்கு கருப்பு கொடிகாட்ட பதுங்கியிருந்த 4 பேரை போலீசார் பிடித்துச் சென்றனர்.

தடையை மீறி குவிந்தனர்

நெல்லை மாவட்டத்தில் 144 தடை உத்தரவு அமலில் உள்ளது. எனவே கூட்டம் போடவோ, கூடி நின்று பேசவோ அனுமதியில்லை என கேடிசி நகர் பகுதி நான்கு வழிச்சாலையில் திரண்டு நின்றவர்களை பார்த்து உதவி கமிஷனர் மாரிமுத்து மைக்கில் எச்சரித்தார். போலீஸ் எச்சரிக்கையையும் மீறி ரதத்தை காண பக்தர்கள், இந்து அமைப்பினர் குவிந்திருந்தனர்.

போலீஸ் போட்டோகிராபர் மயக்கம்

ரதம் வருகையை முன்னிட்டு நெல்லை கேடிசி நகர் பகுதியில் காலை முதல் போலீசார் பாதுகாப்பு பணியில் குவிக்கப்பட்டிருந்தனர். கோடை தொடங்கி விட்டதால் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது போலீசார் பணியில் இருந்தனர். அப்போது பணியில் இருந்த போலீஸ் போட்டோகிராபர் சங்கரபாண்டியன் வெயிலால் திடீரென மயங்கி கீழே விழுந்தார். இதைதொடர்ந்து அங்கு பணியில் நின்ற போலீசார் முகத்தில் தண்ணீர் தெளித்து அவரை ஆசுவாசப்படுத்தினர்.

பாஜ - போலீஸ் வாக்குவாதம்

ராமராஜ்ய ரதம் வருவதற்கு முன்பாக பாஜவினர் இரு சக்கர வாகனங்களில் கொடிகளை கட்டிக் கொண்டு கோஷங்களை எழுப்பியபடி சாரதா கல்லூரிக்கு சென்றனர். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் நின்ற போலீசார் சில பைக்குகளை வழிமறித்து சாவிகளை பறித்தனர். போலீசாரிடம் பாஜ மாவட்ட செயலாளர் தயாசங்கர், பொதுசெயலாளர் சுரேஷ் ஆகியோர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து போலீசார் [illegible] குமார் ஆதித்தன், மாவட்ட பொது செயலாளர்கள் சுரேஷ், பாலாஜி கிருஷ்ணசாமி, இந்து முன்னணி மாநில துணை தலைவர் ஜெயக்குமார், மாநிலகுழு உறுப்பினர் குற்றாலநாதன், பாஜ மகாராஜன், முத்துபலவேசம், வினோத், குமரேசன் மற்றும் பாஜக, இந்து அமைப்புகளை சார்ந்தவர்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மாலை 4.15 மணிக்கு கேடிசி நகரில் இருந்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் நான்கு வழிச்சாலை வழியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ராம ராஜ்யரதம் புறப்பட்டுச் சென்றது.

நெல்லை சரக டிஐஜி கபில்குமார் சரத்கர் உத்தரவின் பேரில் மாநகர போலீஸ்துணை கமிஷனர்கள் சுகுனாசிங், பெரோஸ்கான் அப்துல்லா, எஸ்பி அருண் சக்தி குமார் ஆகியோர் தலைமையில் மாநகர உதவி கமிஷனர்கள்